## சுருக்கம்

உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை – சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரி வட்ட வழங்கல் அலுவலகத்திற்கு ஒப்பளிக்கப்பட்ட 5 தற்காலிக பணியிடங்களுக்கு 01.07.2021 முதல் 30.06.2022 வரை ஓராண்டிற்கு தொடர் நீட்டிப்பு வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் (ஜே2) துறை**

**அரசாணை(நிலை) எண்: 64** | **நாள்: 30.07.2021**

**ஸ்ரீ பிலவ வருடம் ஆடி - 14**
**திருவள்ளுவர் ஆண்டு - 2052**

**படிக்கப்பட்டது:-**

1. அரசாணை (நிலை) எண். 168, வருவாய் நிர்வாக அலகு (வ.நி1(1)) பிரிவு நாள். 08.05.2017.
2. அரசாணை (நிலை) எண்.107, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள் 25.07.2018.
3. அரசாணை (நிலை) எண்.102, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள் 09.09.2019.
4. அரசாணை (நிலை) எண்.89, கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறை, நாள்.20.08.2020.
5. உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையாளரின் கடிதம் ந.க. எண். அ2/12730/2021, நாள். 01.07.2021.

********

**ஆணை :**

மேலே ஒன்றாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் வட்டத்தினை பிரித்து புதிய சிங்கம்புணரி வட்டம் உருவாக்கி புதிய பணியிடங்களான வட்ட வழங்கல் அலுவலர் (துணை வட்டாட்சியர் நிலை), உதவியாளர், இளநிலை உதவியாளர், தனி வருவாய் ஆய்வாளர் (இளநிலை உதவியாளர் நிலை) மற்றும் அலுவலக உதவியாளர் ஆகிய 5 தற்காலிக பணியிடங்களை உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறைக்கு தோற்றுவித்து ஆணையிடப்பட்டது.

2. மேலே இரண்டாவது, மூன்றாவது மற்றும் நான்காவது படிக்கப்பட்ட அரசாணைகளில் மேற்படி புதியதாக தோற்றுவிக்கப்பட்ட சிங்கம்புணரி வட்ட வழங்கல் அலுவலகத்திற்கு ஒப்பளிக்கப்பட்ட 5 தற்காலிக பணியிடங்களுக்கு முறையே 08.05.2018 முதல் 30.06.2019 வரை, 01.07.2019 முதல் 30.06.2020 மற்றும் 01.07.2020 முதல் 30.06.2021 வரையிலான காலத்திற்கு தொடர் நீட்டிப்பு வழங்கி ஆணை வெளியிடப்பட்டது.

3. மேலே ஐந்தாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையில் முக்கியத்துவம் வாய்ந்த பல்வேறு பணிகளை தொடர்ந்து தொய்வின்றி செம்மையாக செய்வதற்கு உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர்

(த.தி.பா)

பாதுகாப்புத் துறைக்கு வழங்கப்பட்ட 5 தற்காலிக பணியிடங்களுக்கும், மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் 30.06.2021 வரை வழங்கப்பட்ட காலநீட்டிப்பு முடிவு பெற்ற நிலையில், 01.07.2021 முதல் 30.06.2024 வரை மேலும் மூன்று ஆண்டுகளுக்கு கால நீட்டிப்பு அளித்து ஆணை வழங்குமாறு உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையாளர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையாளரின் கருத்துருவினை கவனமாக பரிசீலனை செய்து சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரி வட்டத்திற்கு தோற்றுவிக்கப்பட்ட வட்ட வழங்கல் அலுவலர் (துணை வட்டாட்சியர் நிலை), உதவியாளர், இளநிலை உதவியாளர், தனி வருவாய் ஆய்வாளர் (இளநிலை உதவியாளர் நிலை) மற்றும் அலுவலக உதவியாளர் ஆகிய 5 தற்காலிக பணியிடங்களுக்கு 01.07.2021 முதல் 30.6.2022 வரை மேலும் ஓராண்டிற்கு கால நீட்டிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது. மேற்குறிப்பிட்ட 5 பணியிடங்கள் குறித்த விவரங்கள் இணைப்பில் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது.

5. மேலே, பத்தி-4ல் தொடர் நீட்டிப்பு வழங்கப்பட்ட 5 தற்காலிக பணியிடங்களில் பணிபுரியும் பணியாளர்கள் தற்போது அமலில் இருக்கும் ஆணைகளின்படி, அனுமதிக்கப்பட்ட வீதத்தில் ஊதியம் மற்றும் இதர படிகளும் பெற தகுதியுள்ளவர்கள் ஆவர்.

6. மேற்காணும் பணியிடத்திற்கான செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் செலவு செய்யப்பட வேண்டும்:-

"3456-00 நுகர்பொருள் வழங்கல் - 001 - நெறிப்படுத்தலும் நிருவாகமும் - மாநில செலவினங்கள் - AB - மாவட்ட பணியாளரமைப்பு – 301- சம்பளங்கள் "
(Old DPC) (த.தொ.கு. 3456-00-001-AB-0108)
(IFHRMS – 3456 – 00 – 001 – AB-30100)

7. இவ்வரசாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.30361/நிதி(கூ.உ(ம)நு.பா)துறை/2021 நாள்.29.07.2021-ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

முகமது நசிமுத்தின்
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்

ஆணையாளர்,உணவுப்பொருள் வழங்கல் மற்றும்
நுகர்வோர் பாதுகாப்புத் துறை, சென்னை-5.
முதன்மை மாநில கணக்காயர், சென்னை-18.
மாவட்ட ஆட்சியர், சிவகங்கை மாவட்டம்
மாவட்ட கருவூல அலுவலர், சிவகங்கை மாவட்டம்

<u>நகல்</u>

நிதி (கூ.உ.(ம) நு.பா.)துறை, சென்னை-9.
வருவாய் (ம) பேரிடர் மேலாண்மை துறை, சென்னை-9.
சிறப்புக்குழு,
கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் (அந.II)துறை,
சென்னை-9.
இருப்பு கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

30/7/21

பிரிவு அலுவலர்.

30.7.21

## இணைப்பு

**உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையில் உள்ள 5 தற்காலிகப் பணியிடங்களை 01.07.2021 முதல் 30.06.2022 வரை தொடர் நீட்டிப்பு செய்வது குறித்த விவரங்களை கொண்ட அட்டவணை**

| வ. எண் | பணியிடங்களின் பெயர் | பணி இடங்களின் எண்ணிக்கை | ஊதிய ஏற்றமுறை (7 வது ஊதிய குழுவின்படி) | பணியிடங்கள் ஒப்பளிக்கப்பட்ட அரசாணை எண் மற்றும் நாள் | கடைசியாக கால நீட்டிப்பு செய்யப்பட்ட அரசாணை எண் மற்றும் நாள் | தற்போது அரசாணை(நிலை) எண். 64, கூ.உ(ம)நு.பா (தே) துறை, நாள்30.07.2021-ல் கால நீட்டிப்பு செய்யப்படும் காலம் |
|---|---|---|---|---|---|---|
| 1. | சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் வட்டத்தைப் பிரித்து புதிய சிங்கம்புணரி வட்டத்திற்கு வட்ட வழங்கல் அலுவலர் (துணை வட்டாட்சியர் நிலை) | 1 | நிலை 18 ரூ. 36,900 – 1,16,600 | அரசாணை (நிலை) எண். 168, வருவாய், (வ.நி1(1)) துறை, நாள் 08.05.2017 | அரசாணை (நிலை) எண்.89, கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறை, நாள்.20.08.2020. (01.07.2020 முதல் 30.06.2021 வரை) | 01.07.2021 முதல் 30.06.2022 வரை |
| | உதவியாளர் | 1 | நிலை 10 ரூ.20,600-65,500 | | | |
| | இளநிலை உதவியாளர் | 1 | நிலை 8 ரூ. 19,500 – 62,000 | | | |
| | தனி வருவாய் ஆய்வாளர் (இளநிலை உதவியாளர் நிலை) | 1 | நிலை 8 ரூ. 19,500 – 62,000 | | | |
| | அலுவலக உதவியாளர் | 1 | நிலை 1 ரூ. 15,700 – 50,000 | | | |

முகமது நசிமுத்தின்
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்.
30/7/21
30.7.21